# ஜெம்ஸ் சத்தம்

Since 1972

மார்ச் 2023

**சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறார்.**

*சங்கீதம் 73 :1*






















பிப்ரவரி 14 முதல் 17 வரையிலான நாட்கள், **"Make a way"** என்ற கருப்பொருளின் கீழ் சிக்காரியா பணித்தளத்தில் நடைபெற்ற **IMPACT (I Must Prepare A Community Today)** கருத்தரங்கில், ஜெம்ஸ் மற்றும் பல்வேறு ஊழியங்களைச் சேர்ந்த மிஷனரிகள் மற்றும் போதகர்கள் 1195 பேர் பங்கேற்றனர். சகோ. அகஸ்டின் ஜெபக்குமார், போதகர் ஆபிரகாம் D. ஜாண் மற்றும் சகோ.ஜேசன் (ஆசீர்வாத இளைஞர் இயக்கம்) ஆகியோர் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டனர்.

# ஜெம்ஸ் சத்தம்

Since 1972

*Transforming Peoples to Transform Nations*

அன்பின் மடல் – 4

**சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்**

நல்லவராகவே இருக்கும் தேவன் – 13

பணித்தளச் செய்திகள் – 19

முன்னேற்றப் பணி முகவரிகள் – 29

சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் பங்குபெறும் கூட்டங்கள் – 31

*Published by*

**GEMS Educational and Media Services**

14/1, Jeba Nagar, Vasanthapuram South,
Near Vijaya Garden, Tirunelveli 627005
Ph. : 9488771655
E-Mail : media@gemsbihar.org

*Published for*

**Gospel Echoing Missionary Society**

11, 13th Cross Street, New colony
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

*Field office*

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

## 'ஜெம்ஸ்' என்பது,

*Gospel Echoing Missionary Society*

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

# அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,

ஜெபத்திற்கு பதில் தருவதற்கு பூமியை அசைத்து அதிரச்செய்கிறவரும்,சீயோனில் துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்துகிறவரும், ஆவியை ஊற்றி தரிசனங் காணச் செய்கிறவருமாகிய சர்வவல்லவரின் நாமத்தில் வாழ்த்துகள் (சங். 18:6,7; ஏசா. 61:3; அப். 2:17). இன்றையப் போக்குகளைப் (Trends) பற்றி சிந்திப்போம்.

துருக்கியை உலுக்கி உயிர்களை பலிகொண்ட பூகம்பம், நம்மையும் பாதித்துவிட்டது. ஆசியா என்று வேதாகமத்தில் அழைக்கப்படுகிற இன்றைய துருக்கியை, வெளிப்படுத்தின விசேஷத்தில் உதாரணச் சபைகளாகக் காட்டப்படுகிற 7 சபைகள் அமைந்திருந்த நிலப்பரப்பாகிய துருக்கியை பூகம்பம் உருக்கிவிட்டது. அந்நாடு பிற்காலத்தில் கிறிஸ்தவரல்லாத நாடாக மாறினதற்கு என்ன காரணம்? கிறிஸ்தவ ஆலயங்கள் பிற மத வழிபாட்டு ஸ்தலங்களாக மாறினது எப்படி? அடுத்த தலைமுறைக்கு தேவனுடைய வார்த்தையைக் கடத்தாததே காரணம். கட்டிடங்களைக் கட்டுவதில் நாட்டம் கொண்ட சபை, அடுத்த தலைமுறையின் ஆவிக்குரிய வாழ்வை கட்டியெழுப்பத் தவறிவிட்டது. அரசாங்கம் மற்றும் அரசியல் தலையீடு இல்லாமலேயே இது சம்பவிக்கக் கூடும். இங்கிலாந்தில் எத்தனையோ பிரம்மாண்ட ஆலயங்கள், அரசரையே தலைவராகக் கொண்ட சபையின் ஆலயங்கள், ஆளற்றுப்போய், அடுத்த மதத்தின் வழிபாட்டுத் தலங்களாக, இரவு கேளிக்கை விடுதிகளாக மாறிப்போயின; மீந்திருக்கும் ஆலயங்களுக்கும் 60 வயதுக்கு மேற்பட்டோரே அதிகம் வருகின்றனர். அடுத்த தலைமுறையில், இங்கிலாந்தும் இன்னொரு துருக்கி ஆகிவிடலாம். அதற்கடுத்த தலைமுறையில் இந்தியாவுக்கும் இந்தக் கதி வரலாம், நமது தரிசனத்தை அடுத்த சந்ததிக்குக் கடத்தாவிட்டால்.

**"விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்" (சங். 110:3) என்ற வாக்கைப் பிடித்துக்கொண்டவர்களாய் ஜெபிப்பதோடு, செயல்படுவோம். குடும்பமும், சபையும் இளைய தலைமுறையை நோக்கித் திரும்பட்டும்.**

அதே நேரத்தில், ஆறுதலான ஒரு தகவல் அமெரிக்காவிலுள்ள கென்ட்டகி மாநிலத்தின் **ஆஸ்பரி பல்கலைக்கழகத்திலிருந்து** வருகிறது. அங்குள்ள **மாணவர்கள் நடுவில் எழுப்புதல் தீ** பற்றிவிட்டது; ஆயிரக்கணக்கில் கூடி பாவ உணர்வடைந்து அழுகிறார்கள். இம்மடலை எழுதுகிற இந்நாளின் நிலவரப்படி, பத்து நாட்களுக்கும் மேலாக இரவும், பகலும் கூட்டம் நடந்துகொண்டேயிருக்கிறது. பல இடங்களிலிருந்தும் மக்கள் இதனைக் கேள்விப்பட்டு, அங்கு சென்று ஜெபிக்கிறார்கள் என்ற செய்தி நம்மை உற்சாகப்படுத்துகிறது. 'அற்புதம்' போல 'எழுப்புதலும்' ஊழிய வட்டாரத்தில் சம்பிரதாயச் சொல்லாகப் போய்விட்டது.

**எழுப்புதல் என்பதற்கு,** பலரும் பல விளக்கம் கொடுத்தாலும், **"மனந்திரும்புதல் - ஒருமனப்பாடு - தீவிர நற்செய்திப் பணி" என்பதே வேதம் கொடுக்கிற விளக்கம்.**

## எருசலேமின் எழுப்புதலில்:

**"இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி,** பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்.

பேதுரு அவர்களை நோக்கி: **நீங்கள் "மனந்திரும்பி"** (அப். 2:38)

'அவர்கள் **ஒருமனப்பட்டவர்களாய்த்** தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து' (வச. 46)

**"ரட்சிக்கப்படுகிறவர்களைக்** கர்த்தர் **அநுதினமும்** சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்.' (வச. 47)

## அந்தியோகியாவின் எழுப்புதலில்:

**"அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்."** (அப். 11:21)

**"பர்னபா சவுலை** அந்தியோகியாவுக்கு அழைத்துக்கொண்டுவந்தான். அவர்கள் **சபையோடே கூடியிருந்து'** (வச. 25,26)

'அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.' (வச. 24)

## எபேசுவின் எழுப்புதலில்:

**"யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும்** கர்த்தராகிய இயேசுவின் **வசனத்தைக் கேட்டார்கள்."** (அப். 19:10)

**"மாயவித்தைக்காரராகிய அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து,** எல்லாருக்கும் முன்பாக **சுட்டெரித்தார்கள்."** (வச. 19)

அமெரிக்காவின் ஆஸ்பெரி பல்கலைக்கழக மாணவர்கள், பாடல், இசை, ஆராதனை, நடனம், பரவசம் என்று நின்றுவிடாமல், பாவ உணர்வு ஜெபம் என்று தொடர்ந்துகொண்டிருப்பது, இந்திய மாணவர்களையும், வாலிபர்களையும் தொடுவதாக.

என்றாலும், **எழுப்புதல் என்பது ஓரிடத்திலோ அல்லது ஓர் அடுப்பிலோ மாத்திரம் பற்றி எரியும் நெருப்பு அல்ல**; **மாறாக**, **முழு உலகத்தையும் மூடவேண்டும் என்பதே தேவனின் எதிர்பார்ப்பு**. சமாரிய ஸ்திரி இயேசு கிறிஸ்துவை நோக்கி, **"எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்"** என்றும், **"யாக்கோபும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இந்தக் கிணற்றிலே குடித்ததுண்டே"** என்றும் (யோவான் 4:20,12), முன்னோர்கள் விட்டுச் சென்றவைகளைக் குறித்து, 'புண்ணிய ஸ்தலங்களைப்' போல புகழ்பாடிக்கொண்டிருந்தபோதிலும், **சாலொமோனிலும் பெரியவர்**, **யோனாவிலும் பெரியவர் தனக்கு முன்னே நிற்கிறார் என்பதையோ அவள் உணரவில்லையே** (லூக்கா 11:31,32)! அத்துடன், அத்தகைய ஸ்தலங்களுக்குப் போக்குவரவு செய்துகொண்டிருந்த **அவளது வாழ்க்கையும் மாறவில்லையே**! அவளது பிதாக்களைப் பரிசுத்தவான்களாக வேதம் அடையாளப்படுத்தினபோதிலும், அவளோ **"பார்வையாளராகவும்"**, **"பாவியாகவும்தானே" அங்கே நின்று கொண்டிருந்தாள்**. இன்றைய நாட்களிலும், எழுப்புதலை ஓரிடத்தில் மையப்படுத்தி, அங்குதான் ஆண்டவர் இருக்கிறார் என்பது போன்ற பிம்பத்தை உண்டாக்கும் பார்வையாளர்கள் பெருகத் தொடங்கிவிட்டனர்; சிலரோ, பாவிகளாகவே அத்தகைய இடங்களுக்கு சமாரிய ஸ்திரீயைப்போலப் போக்குவரவு செய்யத் தொடங்கிவிட்டனர். இது, சாலொமோனின் வார்த்தைகளுக்கு ஈடாகிவிடக்கூடாதே. (பிரசங்கி 8:10)

இதனால், 'ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது' (யோவான் 4:21) என்று இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரியை நோக்கிச் சொன்ன எழுப்புதலின் காலம் தாமதமாகிக்கொண்டேபோகிறதே. **"நீங்கள் உலகமெங்கும் போய்**, சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' (மாற்கு 16:15) என்ற தேவனின் திட்டத்தினின்று விலகி, **"நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு**, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு

கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம்' (ஆதியாகமம் 11:4) என்ற வலைக்குள் விழுந்துவிடாதபடிக்கு கர்த்தர் நம்மைக் காப்பாராக. **எழுப்புதல் தீ என்பது உலகமெங்கும் பரவவேண்டிய ஒன்று; அது, ஓரிடத்தையே நோக்கி ஜனங்கள் படையெடுப்பதில் நின்றுவிடக்கூடாது.** முட்செடியின் காட்சி கண்ட இடத்தை முக்கியப்படுத்தவில்லை மோசே (யாத். 3:2); ஆனால், தூதன் காட்சி தந்தான் என்று அவ்விடத்தை 'நிகுஸ்தான்' (2 இராஜா. 18:4) ஆக மாற்றிவிட்டவர்கள் உண்டே. **ஆஸ்பெரி பல்கலைக்கழக எழுப்புதலைச் சென்று காண்பதைக் காட்டிலும், இன்று நமது இருப்பிடங்களில் வாஞ்சிப்பதே அத்தகைய எழுப்புதலை அகிலமெங்கும் பரவச் செய்யும்; வேடிக்கை மாத்திரம் பார்ப்போமென்றால், விரைவில் அது அணைந்துபோகும்.**

**கடைசி நாட்களின் கொடிய காலங்களின் இன்னொரு போக்கு, சுகபோகம், ஆடம்பரம் (2 தீமோ. 3:1,4). அவசியத்திற்காக அல்லாமல், அழகிற்காகவோ, ஆனந்தத்திற்காகவோ,**

விலையுயர்ந்த இரு சக்கர வாகனங்களை வாங்குதல், லட்சக்கணக்கான ரூபாயில், கைக்கடிகாரம் அல்லது நூற்றுக்கணக்கான கடிகாரங்கள், ஆடம்பரமான மொபைல் தொலைபேசி வாங்குதல், டிசைனர் துணிகள் (ஒன்று அல்லது மிகக் குறைந்த எண்ணிக்கையில் தயாரிக்கப்படுவதால், விலை பல மடங்கு அதிகம்), உப்புச் சப்பு இல்லாத காரணங்களுக்காக விருந்து (Party), காரணமில்லாத பயணங்கள் (நோக்கமின்றி), அந்தஸ்துக்காக மிக அதிக சந்தா செலுத்தி club–களில் உறுப்பினர் ஆதல்,

என பண விரயம் மட்டுமல்ல, சுகபோகப் பிரியம் தேவப் பிரியத்தை அகற்றிவிடும் அபாயமும்கூட உள்ளது. (2 தீமோ. 3:4)

திருமணங்களைக் கூட, ஆடம்பரத்தின் உச்சக்கட்டமாக சில தேவப் பிள்ளைகளும், ஏன் தேவ ஊழியர்களும் மாற்றிவிட்டது ரத்தக் கண்ணீரை வரவைக்கிறது. வரதட்சணை அல்லது நகை–ரொக்கம்–சீர்வரிசை ஒரு பக்கம் இருந்தாலும், பிற செலவுகளில் தாண்டவமாடுகிற ஆடம்பரமும் தேவனுக்குக் கோபத்தை வரவழைக்கும்.

திருமணத் தகவல் மையத்தில் பதிவு செய்வதிலேயே ஆடம்பரம் ஆரம்பிக்கிறது. சாதாரண Matrimony (திருமணத் தகவல் மையம்) என்றால் சில ஆயிரங்கள்தான். அது சில நேரங்களில் தேவைப்படுகிறது. ஆனால், 'கவுரமிக்க' திருமணத் தகவல் மையத்தில் கட்டணமே ஒரு லட்சம் ரூபாய்.

கருப்பொருள் கல்யாணங்கள் (Theme Marriages) என செலவு மிகுந்த கூத்து. திரைப்படப் பாணி வீடியோக்கள் எடுக்காவிட்டால் (Cinematic Videography) சிலருக்கு திருமணமே வேண்டாமாம். அதன் கட்டணம் ஒரு லட்சத்தில் ஆரம்பிக்கிறது. மணமகளின் கவுன் உடை சுமார் ஐம்பதாயிரம். ஒரு திருமண அழைப்பிதழின் விலை ரூ. 200 –க்கு மேல். அழகு மையத்தின் ஒப்பனை என்ற பெயரில் பெரிய தொகைக்கு வேட்டு மட்டுமல்ல, மணமக்களே அகோரமாகக் காட்சியளிக்கிறார்கள். நகை போடாத திருமணங்களில் இதன் வீரியம் அதிகமாக உள்ளது. திருமண அரங்கத்தை இயற்கையான மலர்களாலும், டிஜிட்டல் திரைகளாலும் அலங்கரிக்க 4 லட்சம் ரூபாய். காஸ்ட்யூம் டிசைனர் உடைகளுக்கு பெரிய தொகை என காரியங்கள்.

**வரதட்சணை சட்ட விரோதம்; ஆடம்பரத் திருமணம் சமூகப் பிரச்சனை - இவற்றில் முன்மாதிரியாக இருக்கவேண்டிய தேவ ஜனம் இடறலாகிப்போகலாமா?**

**ஈசாக்கின் நிச்சயதார்த்தத்தையே நமது நிச்சயதார்த்தங்களில் வாசித்துப் பிரசங்கிக்கிறோம். "செழிப்பு விசுவாசிகள்" ஆபிரகாமின் ஆசீர்வாதத்தையே முன்னிலைப்படுத்துகிறார்கள். ஆனால், ஈசாக்கின் திருமணத்திற்கு ஆபிரகாம் ஒரு விருந்துகூட வைத்ததாக வேதத்தில் பதிவு செய்யப்படவில்லையே** (ஆதி. 24:67) (ஈசாக்கு பால் மறந்ததற்குக் கூட ஆபிரகாம் விருந்து வைத்தான்).

இன்றைய உலகின் இன்னொரு போக்கை அப்போஸ்தலர் 17:19–21–ல் பார்க்க இயலும்.

'அவர்கள் அவனை **மார்ஸ் மேடைக்கு** அழைத்துக்கொண்டுபோய்: நீ சொல்லுகிற புதிதான **உபதேசம்** இன்னதென்று நாங்கள் அறியலாமா?

அந்த அத்தேனே பட்டணத்தார் எல்லாரும் அங்கே தங்குகிற அந்நியரும் நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும், கேட்கிறதிலுமேயொழிய **வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை."**

'மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது, சிலர் **இகழ்ந்தார்கள்"** (வச. 32)

அத்தேனே பட்டணத்தாரில் **பலருக்கு உபதேசம் பொழுதுபோக்கு, சிலருக்கு அது பரியாசம், வெகு சிலருக்கே அது விசுவாசிப்பதற்கான விலையுயர்ந்த விஷயம்.** (வச. 34)

அன்றைய மார்ஸ் மேடைதான், இன்றைய சமூக ஊடகம் (Social Media). உலகத்தாருக்கு மட்டுமல்ல, கிறிஸ்தவர்களுக்கே கூட

ஊடகம் வெறும் பொழுதுபோக்காக மாறிவிட்டது வேதனையே. ஒருவர் கிருபையைப் பற்றி பாடல் பாடினார், அதை ஒரு கோடிக்கும் அதிகமானோர் பார்த்தனர். அதை அரசியல் கேலி வீடியோக்களுக்கும் பயன்படுத்திக்கொண்டனர். அதுகூட பரவாயில்லை, அந்தப் பாடகரை உலகப்பிரகாரமான விழா ஒன்றில் அழைத்து நடனமாடவைத்தனர். அந்தப் பாடலில் கர்த்தர் என்ற ஒரு சொல் கூட இல்லை (எஸ்தர் புத்தகம் போல, அது பழைய ஏற்பாடு. புதிய ஏற்பாட்டில் இயேசுவின் நாமம் கட்டளையிடப்பட்டுள்ளதே). பல லட்சம் பேர் கண்ட அந்த விழாவை, அவர் பயன்படுத்தி, இயேசு என்ற நாமத்தைக் கூடக் கூறவில்லை (அரசியல்வாதிகள்கூட அல்லேலூயா போடுகின்றனர்). இன்னும் சில கிறிஸ்தவர்கள் சமூக ஊடகத்தைப் பணத்துக்காகவோ, புகழுக்காகவோ பயன்படுத்துகின்றனர்.

பரியாசக்காரரின் படைக்கலமாக சமூக ஊடகம் மாறிப்போனது பரிதாபமே. ‘பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்’ என சங்கீதம் ஒன்றில் வசனத்தை மனப்பாடம் பண்ணின நமக்கு, ‘பரியாசக்காரர் தோன்றும் காட்சிகளைப் பாராமலும்’ என வியாக்கியானம் தேவைப்படுகிறது.

**இந்தக் கடைசிக் காலத்திற்கு, பரியாசக்காரர் அதிகமாகத் தோன்றுவதும் ஓர் அடையாளமே.** (யூதா 18)

அவர்கள் பிரிவினை, ஜென்மசுபாவம், இச்சைகளை பரப்புவார்கள். (யூதா 19). பரியாசக்காரக் காட்சிகள், வருகையைப் பற்றிய உணர்வை அகற்ற முயலும். (2 பேதுரு 3:3,4). அவை பட்டணத்தில் தக்கொளுத்திவிடும். ((நீதி. 29:8) (குரோதத்தை விலக்குகிற ஞானமுள்ள ஊடக நிகழ்ச்சிகளைப் பார்ப்போமாக). அவை பணத்திற்காக தேவப் பகைஞரைப் புகழும். தேவப் பிள்ளைகளுக்கு எதிராக இருக்கும். (சங். 35:16)

**அதே மார்ஸ் மேடையைப் பயன்படுத்தி, பவுல் கிறிஸ்துவை அறிவித்து, நீதிபதி உள்ளிட்ட சிலரை ஆதாயம் செய்தானே.** சமூக ஊடகங்களை நற்செய்திப்பணிக்காகவும், வசனத்தைப் போதிப்பதற்காகவும், ஜெபத்தைத் திரட்டுவதற்காகவும் பயன்படுத்துவது அவசியம். (அப். 17:34)

அதற்கான தாலந்துகளையும், கிருபைகளையும் பெற்றவர்களை தேவன் எழுப்புவாராக. Creative Heads (படைப்பாற்றல் மிக்கவர்கள்), Content writers (உள்ளடக்க எழுத்தாளர்) ஆகியோரை உருவாக்கவேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. செய்திகள், பாடல்களையும் கடந்து, நாம் சமூக ஊடக நிகழ்ச்சிகளை வழங்கவேண்டும். நாடகங்கள் ஏற்றதாக

இருக்காது. சுருக்கமான, வேகமான, சமூக ஊடக நிகழ்ச்சிகள் தேவை. (எ.கா) ஆவணப் படங்கள், Talk Shows (கலந்துரையாடல்கள்), Game shows (அறிவு விளையாட்டுகள்).

ஆவிக்குரிய YouTubers உருவாக ஜெபிப்போம், செயல்படுவோம்.

இன்றைய உலகின் இன்னொரு போக்கு, பக்தியின் வேஷம் தரித்து, அதன் பெலனை மறுதலிப்பது. (2 தீமோ. 3:5)

பக்திக்கு வரையறை யாக்கோபு 1:26,27

**"திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும்... மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது."**

நாவை அடக்குவதும் பக்தியின் ஒரு பகுதி (வச.26). நாவை பயன்படுத்துவதைப் பற்றிப் பேசுகிறவர்கள் சிலர், இரக்க ஊழியம் செய்வது பற்றி மூச்சே விடுவதில்லை. இன்னும் சில மேதாவிகள், 'ஏழைகளுக்கு உதவுவது யூதாஸ் காரியோத்–ன் உபதேசம்' என்று கண்டுபிடித்து கதைக்கின்றனர்.

'கோவிட்' நாட்களில், ஒரு பிரசங்கியார் '5–வது நிலம் வாங்கிவிட்டேன், 6–வது கார் வாங்கிவிட்டேன்' என்று சமூக ஊடகங்களில் பதிவிட்டுக்கொண்டேயிருந்தார். 'கஷ்டப்படுவோருக்கு உணவு கொடுத்தேன், உதவி செய்தேன்' என்று ஒரு பதிவாவது போடுவார் என்று காத்திருந்து, ஏமாந்தேன்.

**யோபுவின் இரட்டிப்பான ஆசீர்வாதம் பற்றிப் பேசும்போது, அவனது இரக்க ஊழியத்தையும் பின்பற்றவேண்டியது அவசியமல்லவா?**

யோபு, **பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டோருக்கு** உதவினான். (யோபு 29:12 'ஏழையையும் ரட்சித்தேன்' வசனம் 16–ல் 'எளியவர்களுக்குத் தகப்பன் ஆனேன்')

**குடும்பரீதியாகப் பாதிக்கப்பட்டோருக்கு** இரங்கினான் (அதே வசனத்தில் 'திக்கற்ற பிள்ளையை'); **சமூகரீதியாகத் தள்ளப்பட்டோருக்கு** நன்மை செய்தான். (அதே வசனத்தில் 'உதவியற்றவனை'); **சரீரரீதியாகப் பெலவீனருக்குத்** தாங்கும் கருவியானான். (வசனம் 15 'குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்கு காலுமாய் இருந்தேன்'); **தேவையில் இருப்போருக்கு உதவாத பக்தி, பெலனற்றது. நன்மை செய்யாத கிறிஸ்தவம் வெறும் வேஷமே.**

லவோதிக்கேயா சபைக் காலத்தில் நாம் வாழ்கிறோம் என நம்புகிறோம். **இன்றைய சபையைப் பற்றிய ஒரு பரிதாபமான சித்திரம்** வெளிப்படுத்தின விசேஷம் 3:15–20–ல் விளக்கப்பட்டுள்ளது.

## அனலற்ற நிலை (வசனம் 15)

எத்தனை அக்கினி அபிஷேகக் கூட்டங்கள், எத்தனை அக்கினி முகாம்கள், 'அக்கினி – அக்கினி' என பாடல்கள், ஜெபங்கள், துதிகள். ஆனால், 'வெதுவெதுப்பே விளைவு' என தேவன் வெம்பிப்போய்க் கூறுகிறார்.

**ஊழியம் செய்வது அல்லவா அனலுக்கு அடையாளம் (ரோமர் 12:11), ஆவிக்குரிய தரித்திரம் (வசனம் 17).**

'எங்கள் சபைதான் நகரிலேயே பெரிய கட்டிடத்தைக் கொண்டுள்ளது', 'எங்கள் ஊழியக்காரர்தான் ஊரிலேயே விலையுயர்ந்த கார் வைத்துள்ளார்', 'எங்கள் ஊழியத்தில்தான் சினிமாக்காரர்களிடம்கூட இல்லாத கருவிகள் உள்ளன', 'எங்கள் கோபுரம்தான் மாவட்டத்திலேயே உயரமானது', 'எங்கள் ஆலயம்தான் திருமண்டலத்திலேயே மிக அதிகமான டெபாசிட்–ஆக 'கோடியில்' ரூபாய் வைத்துள்ளது' என பலர் மார்தட்டிக்கொண்டாலும், கர்த்தர் தவிக்கிற மனதுடன் 'தரித்திரனே' என சபையைப் பார்த்துப் புலம்புகிறார்.

**பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைப்பதல்லவா, ஆவிக்குரிய பணக்காரர் ஆவதற்கு ஒரே வழி!** (மத். 6:19–21)

## ஆவிக்குரிய நிர்வாணம் (வசனம் 17)

'சபையே நீ நிர்வாணி. என்னிடம் வெண் வஸ்திரங்களை வாங்கிக்கொள்' என தேவன் கதறுகிறார். (வசனம் 18)

**பரிசுத்தவான்களின் நீதியே, வெண் வஸ்திரம்** (வெளி. 19:8,14)

**மணவாட்டியின் உடையும் அதுதான், பரலோக சேனை வீரர்களின் சீருடையும் அதுதான்.** கல்யாண விருந்தில் மகிழ்வது மட்டும் சபையின் காரியமல்ல, போர்முனையில் நிற்பதும் சபையின் கடமை.

## ஆவிக்குரிய குருட்டுத்தனம் (வசனம் 17)

'தரிசனங்களைக் காண்கிறேன்' 'பரலோகத்திற்குப் போய்ப் பார்த்தேன்' 'கிறிஸ்துவை முகமுகமாகத் தரிசித்தேன்' 'தேவதூதர்களைச் சந்தித்தேன்' 'எலியாவை, மோசேயை, சாமுவேலைப் பார்த்தேன்' என்றெல்லாம் சொல்வோரின் எண்ணிக்கை என்றும் இல்லாத அளவு இன்று பெருகிக்கிடக்கிறது. ஆனால், **சபையோ மனிதர்களை, மரங்களாகக் காண்கிறது**. 'எவ்வளவு விறகு கிடைக்கும்? எவ்வளவு மரச்சாமான்கள் செய்யலாம்? எவ்வளவு வருமானம், லாபம் வரும்?' என்ற கண்ணோட்டம் மேலோங்கி நிற்கிறது.

**சபை, "கடல் மேல் நடந்து வருகிற கர்த்தரை", பிசாசாகப் (ஆவேசம்) பார்க்கிறது.** உபத்திரவங்களையும், சிட்சைகளையும், முள்ளையும் தேவன் அனுமதித்த ஆசீர்வாதங்களாகக் காண இயலாது, அவை 'பிசாசு, மந்திரவாதம்' எனப் புலம்புகிறது. ஆட்டுக்குட்டியானவரின் ஏழு கண்களும், பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவ ஆவிகள் அல்லவா? (வெளி. 5:6). அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின் பார்வை, பூமி முழுவதும் உள்ள தேவைகளைப் பார்க்கிற பார்வை, சபைக்கு வாய்ப்பதாக! கொடிய நாட்களை கொடியேற்றுகிற நாட்களாக மாற்ற செயல்படுவோம்!

**கடைசிக் காலம் கொடிய நாட்கள்தான்**
**துடைத்துப்போடும் துயர்கள் நடக்கின்றன**
**கடத்திடுவோம் வசனத்தை தரிசனத்தை சாட்சியை**
**தடுத்திடுவோம் தலைமுறைகள் தறிகெட்டுப் போவதை**

**ஆடல் பாடல் கூட்டம் கூத்து போதும்**
**தேடும் தேவனின் தேவையை உணர்வோம்**
**நாடும் ஊரும் நாதரை அறிய நாடுவோம்**
**பாடும் கடினப் பாதையும் கர்த்தரின் கருவியே**

**சீரும் சிறப்பும் எழுப்புதல் அல்ல**
**கூரான உணர்வும் ஆத்தும அறுவடையும்**
**ஓராவி ஒருமனம் ஒரே பேச்சு என்பதும்**
**மாறாத தேவனின் மாபெரும் எழுப்புதல்**

**சுகபோகம் செத்தநிலை சிலுவையே ஜீவ அலை**
**சமூக ஊடகம் சிரிக்க அல்ல எரிக்க**
**சிறந்த சந்ததி தேவ ராஜ்யத்தில் பிறக்க**
**மறந்த சபை மறுரூபம் பெறட்டும் பிழம்பாக**

**உதவட்டும் உன்னதத்தில் உயரட்டும் திருச்சபை**
**கதவருகே கர்த்தர் கவனமாக செல்வோம்**
**கண்களாக தேவாவியை அணிவோம் துணிவோம்**
**மண்மீது விண்ணரசு மலரட்டும் வீரியத்துடன்**

**அன்பரின் அறுவடைப் பணியில்**
**ஜெம்ஸ் குடும்பத்தினர்**

# நல்லவராகவே இருக்கும் தேவன்

சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

இஸ்ரவேல் ஜனங்களுக்கு விசேஷித்த கிருபைகளை தேவன் தந்தருளியது மாத்திரமல்ல, தன்னுடைய மகிமையான காரியங்களையும் அறிந்துகொள்ளும்படியாக அவர்களுக்கு எழுதிக் கொடுத்திருந்தார். பரத்திற்கடுத்த காரியங்களோடு அவர்கள் தங்களை இணைத்துக்கொள்ளும்படியாகவும், தேவனை துதிக்கும்படியாகவும், அத்துடன் தேவனை எப்படி ஆராதிக்கவேண்டும் என்றும் முறையாக அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். விழுந்துபோன தூதனாகிய லூசிபரும், தள்ளப்படுவதற்கு முன் தேவனை ஆராதித்தவன் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தேவன் எப்படிப்பட்டவர் என்றும், எப்படிப்பட்ட ஆராதனைக்குப் பாத்திரர் என்றும், எத்தகைய ஆராதனையில் அவர் பிரியப்படுகின்றவர் என்றும், விருப்பமடைகின்றவர் என்றும் நன்கு அறிந்தவன் அவன். எனவே, தன்னோடு விழத்தள்ளப்பட்ட தூதர்கள் மூலமாக, இந்த உலகத்தில் வாழும் ஜனங்கள் தன்னை ஆராதனை செய்யும்படியாக, ஆராதனையைக் குறித்த ஒரு பக்கத்தை மாத்திரமே அவன் வெளிப்படுத்துகின்றான். உண்மையான ஆராதனையின் ஆழத்தை அறியாத ஜனங்கள், ஆண்டவரை மறந்து, அவனது வலையில் சிக்கிக்கொள்வது நிச்சயம்.

இவ்விரண்டிற்கும் இடையிலான வித்தியாசத்தை நாம் அறிந்துகொள்வது சற்று கடினமானதே. என்றபோதிலும், ஆராதனை என்பது ஆண்டவரை மாத்திரமே மையமாகக் கொண்டு அமையவேண்டும் என்ற இந்த அடிப்படை உண்மையிலிருந்து நாம் சற்றும் அகன்றுவிடக்கூடாது.

**அல்லேலூயா, கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. (சங்கீதம் 106:1)**

இஸ்ரவேல் மக்கள் **"அல்லேலூயா"** என்ற வார்த்தையை தங்கள் ஆராதனையில் அதிகம் உபயோகப்படுத்தினார்கள். 'கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது' என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் ஒருபோதும் தங்கள் வாழ்க்கையில் மறக்கவில்லை; எனவே, ஆண்டவரை அவர்கள் ஆராதனை செய்யும்போது, பணிந்து குனிந்து அவரைத் தொழுதுகொள்ளுகின்றார்கள். இந்த சங்கீதத்திலும், தேவன் செய்த நன்மையான காரியங்களை அறிந்தவனாகவே உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவரை ஆராதிக்கின்றான் சங்கீதக்காரன். அநேக நேரங்களில், வாயின் வார்த்தைகளினால், 'தேவன் நல்லவர்' என்று நாம் ஒருவேளை சொல்லிவிடலாம், ஆராதனையின்போதும் உதடுகளால் உச்சரித்துவிடலாம்; ஆனால், உள்ளத்தின் ஆழத்திலோ, 'தேவன் என்னுடைய வாழ்க்கையில் நல்லவராக இருக்கிறாரா?' என்ற கேள்வி விடையற்றதாக காணப்பட்டுக்கொண்டேயிருக்கும். அநேக நேரங்களில் நம்முடைய உதடுகள் சொல்லும் வார்த்தைகளை நம்முடைய உள்ளம் அங்கீகரிப்பதில்லை, ஒப்புதல் அளிப்பதில்லை. தேவன் நல்லவராக இருப்பாரென்றால், இப்படிப்பட்ட காரியங்கள் உலகத்தில் ஏன் இன்னும் நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன? என்றும், தேவன் நல்லவராக இருப்பாரென்றால், என்னுடைய வாழ்க்கை ஏன் இப்படி இருக்கின்றது? என்றும், தேவன் நல்லவராக இருப்பாரென்றால், தேசத்தில் யாரோ ஒரு மனிதர் செய்யும் தவறினால், அறியாமையிலிருக்கும் சாதாரண மக்கள் ஏன் சங்காரமாகிறார்கள்? என்றும், சிங்காசனத்தில் தேவன் வீற்றிருப்பாரென்றால், பூமியில் இத்தனை சீர்குலைவுகள் ஏன் ஏற்படுகின்றன? என்றும், ஏன் அவைகள் அனுமதிக்கப்படுகின்றன? என்றும் அடுக்கடுக்கான கேள்விகள் மனிதர்களின் மனதில் ஒருவேளை எழக்கூடும். உலகத்தாரின் உள்ளத்தில் எழும்பும் இப்படிப்பட்ட ஒரு புறத்தை மாத்திரமே மனதில் கொண்ட கேள்விகள், 'தேவன் நல்லவரா?' என்று நம்மையும் சந்தேகத்தின் வழிக்குள் செல்லும்படியாகத் தூண்டக்கூடும்.

என்றபோதிலும், **"சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்"** (சங்கீதம் 73:1) என்ற சங்கீதக்காரன் எழுதும் மற்றுமொரு சத்தியத்தையும் நாம் மனதில் கொள்ளவேண்டியது அவசியம். 'தேவன் நல்லவர்' என்பது மெய்தான்; என்றாலும், சுத்த இருதயமுள்ளவர்களுக்கே அவர் நல்லவராயிருக்கிறார். 'சுத்த இருதயமுள்ளவர்களுக்கே தேவன் நல்லவராயிருக்கிறார்' என்பது தேவ ஜனங்களின் எண்ணம். ஆனால், 'தேவன் நல்லவராயிருந்தால், இவைகளெல்லாம் உலகத்தில் ஏன் நேரிடுகின்றன?' என்பது உலக சிந்தையோடு வாழும் மக்களின் எண்ணம். இதனாலேயே, உலக சிந்தையோடிருக்கின்ற மக்களால், 'தேவன் நல்லவர்' என்பதைக்

காணமுடியவில்லை; அத்துடன், தேவனிடத்திலிருந்து நன்மையான காரியங்களையும் தங்கள் வாழ்க்கையில் அவர்களால் பெற்றுக்கொள்ள இயலவில்லை.

"**கர்த்தர் நல்லவராயிருந்தார்**" என்று எழுதும் சங்கீதக்காரன், கூடவே, நாங்கள் முன் நாட்களில் எப்படிப்பட்டவர்களாயிருந்தோம் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றான். ஆண்டவரே, நீர் நல்லவர், உம்முடைய கிருபை என்றுமுள்ளது என்று எழுதும் சங்கீதக்காரன், அதனை நினைவுகூர முற்காலத்தில் நடைபெற்றவைகளையும், தாங்கள் நடந்துகொண்ட விதத்தையும் ஞாபகத்தில் கொண்டுவருகின்றான். "**எங்கள் பிதாக்களோடுங்கூட நாங்களும் பாவஞ்செய்து, அக்கிரமம் நடப்பித்து, ஆகாமியம்பண்ணினோம்**" (*சங்கீதம் 106:6*) என்று தங்கள் முன்னோரின் நிலமையைச் சுட்டிக்காட்டுகின்றான். மேலும், தங்களது முன்னோர்களின் காரியங்களை சங்கீதக்காரன் குறிப்பிட்டு, அவர்களுக்குள் காணப்பட்ட தீமையானவைகளைச் சுட்டிக்காட்டி எழுதும்போது, தன்னையும் முன்னோர்களோடு இணைத்தே எழுதுகின்றான், அவர்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இல்லை என்றும் அறிக்கையிடுகின்றான். "**தேவன் நல்லவர்**" என்று முழு உள்ளத்தோடு சொல்ல இயலாத நிலையில் ஒருவேளை நாம் காணப்படலாம்; அல்லது, அவரது கிருபையினை உள்ளத்தில் உணரமுடியாதவர்களாக நாம் காணப்படலாம்; என்றபோதிலும், அவர் நமக்கு தீமை செய்யவில்லை, நல்லவராகவே இருந்தார் என்பதை ஒருபோதும் நாம் மறந்துவிடக்கூடாது. நம்முடைய வாழ்க்கையில் எத்தனையோ ஆகாமியங்கள், அக்கிரமங்கள் மற்றும் அவருக்குப் பிரியமில்லாத காரியங்கள் காணப்பட்டபோதிலும், தேவனோ இன்றுவரை நமக்கு நல்லவராகவே இருக்கின்றார்.

முதலாவதாக, **எங்கள் பிதாக்கள் எகிப்திலே உம்முடைய அதிசயங்களை உணராமலும், உம்முடைய கிருபைகளின் திரட்சியை நினையாமலும் போய், சிவந்த சமுத்திர ஓரத்திலே கலகம்பண்ணினார்கள்.** (*சங்கீதம் 106:7*)

தங்கள் மனதிலும் தோன்றாத, தங்களால் நினைத்துக்கூடப் பார்க்க இயலாத அதிசயமான காரியங்களை தேவன் தங்களுக்காகச் செய்ததை முன்னோர்கள் தங்கள் சொந்தக் கண்களினால் கண்டிருந்தார்கள். பலவான்களாலும், பணம் படைத்தவர்களாலும் செய்ய இயலாத காரியங்களை தேவன் அவர்களுக்காகச் செய்துகாண்பித்தார். முழு எகிப்து தேசமும் அந்தகாரத்தினால் மூடப்பட்டிருக்க, அங்கே அடிமையாக வாழ்ந்துகொண்டிருந்த தன்னுடைய ஜனங்களுக்கு மாத்திரம் வெளிச்சத்தைக் கொடுத்தார். எகிப்தியருக்கு அந்தகாரம்; ஆனால், இஸ்ரவேலருக்கோ வெளிச்சம். எகிப்தியர்களுடைய மிருகங்கள் செத்து மடிந்துகொண்டிருந்தன; ஆனால், இஸ்ரவேலருடைய மிருகங்களோ

பாதுகாக்கப்பட்டன. எகிப்தியர்களுடைய வீடுகளும், பாத்திரங்களும் தவளைகளால் நிறைந்திருந்தன; ஆனால், தேவனுடைய ஜனமான இஸ்ரவேல் ஜனங்களின் வீடுகளோ சுத்தமாயிருந்தன; தேவனாலேயே இது சாத்தியமாயிற்று. என்றபோதிலும், தேவனுடைய இத்தனை வல்லமையான காரியங்களைக் கண்ட பின்னும், சிவந்த சமுத்திரத்தின் ஓரத்தில் வந்தபோதோ, தேவன் செய்தவைகளை மறந்தவர்களாகவே அவர்கள் காணப்பட்டார்கள், தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள், எகிப்திலிருந்து தங்களை நடத்திக்கொண்டு வந்த மோசேக்கு விரோதமாகப் பேசத்தொடங்கினார்கள். என்றபோதிலும், தேவன் அவர்களை கைவிட்டுவிடவில்லை, அவர்களை விட்டு விலகிவிடவில்லை; தேவன் அவர்களுக்கு நல்லவராகவே இருந்து தொடர்ந்து அவர்களை வழிநடத்திச் சென்றார். **தேவனுக்கு விரோதமாக நாம் கலகம்பண்ணினாலும்**, **தேவனோ தன்னை நல்லவராகவே நிரூபிக்கிறார்.** எனவே, 'ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார் (சங்கீதம் *106:8*) என்று எழுதுகின்றான் சங்கீதக்காரன்.

கடந்த நாட்களில் தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்த நன்மையான காரியங்களை நாம் மறந்துபோவதினாலேயே, நிகழ்காலத்தில் நமக்கு முன் நிற்கும் பிரச்சனைகளைக் கண்டு அவருக்கு விரோதமாக இஸ்ரவேல் மக்களைப் போல நாமும் கலகம்பண்ணிவிடுகின்றோம், நம்முடைய உதடுகளிலிருந்து தேவனுக்கு விரோதமான வார்த்தைகள் வெளிவரத் தொடங்கிவிடுகின்றன; அதுமாத்திரமல்ல, நம்முடைய இருதயத்திலும் தேவனுக்குப் பிரியமற்ற சிந்தைகளும், தேவனை துக்கப்படுத்தும் முரட்டாட்டத்திற்கடுத்தக் காரியங்களும் கொஞ்சம் கொஞ்சமாகத் துளிர்விடத் தொடங்கிவிடுகின்றன. நம்முடைய வாழ்க்கையில் நாம் மாற்றமடையத் தொடங்கினாலும், கர்த்தரோ தன்னை நல்லவராகவே என்றும் நமக்கு வெளிப்படுத்துகின்றார்.

இரண்டாவதாக, **ஆனாலும் சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள்; அவருடைய ஆலோசனைக்கு அவர்கள் காத்திராமல்**, **வனாந்தரத்திலே இச்சையுள்ளவர்களாகி**, **அவாந்தரவெளியிலே தேவனைப் பரீட்சைபார்த்தார்கள்.**(சங்கீதம் *106:13,14*)

இஸ்ரவேல் மக்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்துசென்றபோது, எகிப்தியர்களைக் குறித்து அவர்களுக்குள் காணப்பட்ட பயம் அகன்றுபோயிருந்தது. ஏனெனில், தங்களுக்கு விரோதமாகப் புறப்பட்டு வந்த எதிரிகளும், எகிப்தியர்களின் இரதங்களும், குதிரைகளும் சிவந்த சமுத்திரத்தில் அமிழ்ந்து மாண்டதை அவர்கள் கண்ணாரக் கண்டிருந்தார்கள். ஆனாலும், அங்கிருந்து சற்று தூரம் அவர்கள் பயணித்தபோது, அவர்கள் மற்றும்

ஒரு பிரச்சனையினை எதிர்கொள்ள நேரிட்டது; ஜனங்கள் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, தங்களுக்கு முன் காணப்பட்ட தண்ணீரும் குடிப்பதற்கு ஏற்றதாயிராமல் கசப்பாயிருந்தது. இதைக் கண்டபோது, உடனே அவர்கள் தேவனை மறந்துவிட்டார்கள். அவருடைய ஆலோசனைக்கு அங்கே அவர்கள் காத்திருக்கவில்லை. தங்களுக்கு முன் நிற்கும் பிரச்சனையைக் கண்டதும், இதுவரை ஆண்டவர் செய்த நன்மையான காரியங்கள் அனைத்தையும் மறந்துபோனவர்களாக அவர்கள் காணப்பட்டார்கள்.

நாமும் ஒருவேளை இந்த இஸ்ரவேல் ஜனங்களைப் போலக் காணப்படக்கூடும். வாழ்க்கையில் பிரச்சனைகளைச் சந்திக்கும்போது, தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் பண்ணுகிறவர்களாகவும், அவருக்கு விரோதமான வார்த்தைகளைப் பேசுகிறவர்களாகவும் மாத்திரமல்ல, இதுவரை அவர் நமக்குச் செய்த நன்மையான காரியங்கள் அனைத்தையும் மறந்தவர்களாகவும் மாறிவிடுகின்றோம். பிரச்சனைகளின் மத்தியில், அவர் நமக்கு வெளிப்படுத்தவிருக்கும் ஆலோசனைக்குக் காத்திராமல், கர்த்தர் எப்பொழுதும் நமக்கு நல்லவராகவே இருக்கின்றார் என்பதையும் மறந்துவிடுகின்றோம்.

சமுத்திரம் பிளந்தது என்ற செய்தியை இஸ்ரவேல் ஜனங்கள் ஒருபோதும் கேட்டதில்லை, என்றபோதிலும், தேவன் அவர்களுக்காக சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்து, உலர்ந்த தரையின் வழியாக அவர்களை வழிநடத்திச் சென்றார். ஆனால், தண்ணீர் தேவைப்பட்டபோதோ, தங்களை நடத்திக்கொண்டுவந்த மோசேயினிடத்திற்குச் சென்று, 'தேவனிடத்தில் விசாரியும்' என்று அவர்கள் சொல்லவில்லை. அதற்கு மாறாக, ஏன் எங்களை இங்கே கொண்டுவந்தீர்? தண்ணீர் இல்லாமல், நாங்களும் எங்கள் குழந்தைகளும் மிருக ஜீவன்களும் மாண்டுபோகிறோமே என்கிறார்கள். செங்கடல் முன்னே வந்தபோது, தேவனுடைய கிரியையைக் கண்டவர்கள்தான்; என்றாலும், இப்போதோ, தேவ ஆலோசனையைக் கேட்கக்கூட அவர்களுக்கு நேரமில்லை. என்றபோதிலும் தேவன் அவர்களுக்கு நல்லவராகவே இருந்தார். ஒரு மரக்கிளையை வெட்டி அதிலே போடு என்ற ஆலோசனை தேவனிடத்திலிருந்து வந்தது. அந்த மரம் திடீரென அங்கே முளைத்துவரவில்லை; ஏற்கனவே அங்கே இருந்ததுதான்; ஆனால், அதனை பயன்படுத்தும் முறையினையோ அவர்கள் அறியாதிருந்தார்கள். முன்னமே தேவன் அதனை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார்; ஆனால், அவர்களால் அதனைக் காணமுடியவில்லை. இந்த சிறிய ஆலோசனையை தேவனிடத்தில் கேட்கவும் அவர்கள் ஆயத்தமாக இல்லை; என்றாலும், தேவன் அவர்களுக்கு நல்லவராகவேயிருந்தார். நம்முடைய வாழ்க்கையிலே தேவன் செய்த நன்மையான காரியங்களைக் நினைவுகூர்ந்தால், அவரை ஆராதிக்கும் உணர்வு நம்முடைய இருதயத்தில் தானாகவே வந்துவிடும்.

மூன்றாவதாக, தன் சொந்த ஜனங்களுக்கு உள்ளே உண்டான பொறாமை. **பாளயத்தில் அவர்கள் மோசேயின்மேலும், கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோனின்மேலும் பொறாமைகொண்டார்கள்.**(சங்கீதம் 106:16). என்றபோதிலும், தேவன் அவர்களை முற்றிலும் தள்ளிவிடவில்லை, அவர்களுக்கு நல்லவராகவே இருந்தார், தன்னுடைய கிருபையை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

அதுமாத்திரமல்ல, இறுதியாக, **அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியையுண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள். தங்கள் மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள்.** (சங்கீதம் 106:19,20)

தன் தாசனாகிய மோசேயின் மூலமாக அவர்களோடு கூட பேசுகின்றார், அவர்களை வழிநடத்துகின்றார், அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து காரியங்களையும் கொடுக்கின்றார், ஆலோசனை அளிக்கின்றார், பாதை காட்டுகின்றார், தகப்பன் தன் பிள்ளையை நடத்துவதைப் போல கரம் பிடித்து அவர்களை நடத்திச் செல்லுகின்றார். என்றபோதிலும், அவரை தள்ளிவிட்டு, வணங்கும்படியாக ஒரு கன்றுகுட்டியை அவர்கள் உண்டாக்குகின்றனர். முதலாவது தங்களுக்கு விரோதமாக எழும்பி வந்த எதிரியைக் கண்டு கலங்கினார்கள்; இரண்டாவதாக, தங்கள் தேவைகளைக் குறித்துப் பேசினார்கள்; மூன்றாவதாக, தங்களை நடத்திக்கொண்டுவந்த தலைவர்கள் மீது பொறாமை கொண்டார்கள்; இறுதியாக தேவனையே தொட்டுவிட்டார்கள். என்றபோதிலும், தேவன் அவர்களுக்கு நல்லவராகவே இருந்தார்.

எனவே, அவர்கள் கூப்பிடுதலை அவர் கேட்கும்போதோ, அவர்களுக்கு உண்டான இடுக்கத்தை அவர் கண்ணோக்கி, அவர்களுக்காகத் தமது உடன்படிக்கையை நினைத்து, தமது மிகுந்த கிருபையின்படி மனஸ்தாபப்பட்டு, அவர்களைச் சிறைபிடித்த யாவரும் அவர்களுக்கு இரங்கும்படி செய்தார் (சங்கீதம் 106:44–46) என்றும், எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப்போற்றி, உம்மைத் துதிக்கிறதில் மேன்மைபாராட்டும்படி எங்களை இரட்சித்து, எங்களை ஜாதிகளிலிருந்து சேர்த்தருளும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர். ஜனங்களெல்லாரும்: ஆமென், அல்லேலூயா, என்பார்களாக (சங் 106:47,48) என்றும் தேவனைக் குறித்து எழுதுகின்றான் சங்கீதக்காரன். ஆம், பிரியமானவர்களே, இன்றும் அவர் நமக்கு நல்லவராகவே இருக்கின்றார்.




## ரோஹ்தாஸ் கோட்டம்

### மார்ச் 01 — திலௌத்து

பாபுகஞ், மகராஜ்கஞ், சரய்யா, பட்சா, ஹர்னாசிட்டி, சந்தன்புரா, அம்ஜோர் ஆகிய கிராமங்களிலும் மற்றும் திலௌத்து காவல் நிலைய காவலர்கள் மத்தியிலும் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அநேக நாட்களாக வியாதியின் படுக்கையில் இருந்த கைதி கிராமத்தைச் சேர்ந்த ரேணுதேவியின் குழந்தைக்காக ஏறெடுக்கப்பட்ட தொடர் ஜெபத்தைக் கேட்ட தேவன் குழந்தைக்குப் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இதினிமித்தம் குழந்தையின் பெற்றோர் தொடர்ந்து சபை ஆராதனையில் கலந்துகொள்கிறார்கள். பின்மாற்றத்திலுள்ள விசுவாசிகளுக்காகவும், சுவிசேஷத்தைக் கேட்ட காவலர்கள் மனந்திரும்பவும், முழங்காலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள இப்பணித்தள ஊழியருடைய தந்தையின் பூரண சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

### மார்ச் 02 — சரோதக்

சரிகாவா, பஹேரா, கேசர்வரா, பந்தா, பிரபானியா, பஹேரா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. இப்பகுதியில் நடத்தப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் 150 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. தொடர் ஊழியத்தின் வாயிலாக சிலர் புதிய தொடர்பில் உள்ளனர். அநேக நாட்களாக பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டிருந்த லக்ஷ்மிதேவியின் மகள் இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது விடுதலையானார். நெஞ்சுவலியால் அவதிப்பட்டுவரும் லாலுசிங்கின் சுகத்திற்காவும், மலைப்பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை அரசு விரைவில் பூர்த்தி செய்யவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய மனைவியின் சரீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

## மார்ச் 03 ரோஹ்தாஸ்

